Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Name | :M.Govindaraj |
| Father's Name | :Muniyappa Naidu |
| Village | :Mittapalli |
| Taluk | :Bargur |
| Caste | :BC |
| Calling | :Business |
| Religion | :Hindu |
| Age | :46 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.11.2025.

MCOP.No.70/2022 PW1 Name:**கோவிந்தராஜ்**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

**மனுவில் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், விபத்து பதிவேட்டு நகல் ம.சா.ஆ.2 ஆகவும், மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு நகல் ம.சா.ஆ.3 ஆகவும், பதிவு புத்தக நகல் ம.சா.ஆ.4 ஆகவும், காப்பீட்டு சான்று நகல் ம.சா.ஆ.5 ஆகவும், ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.6 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.7 ஆகவும், காரின் பதிவு புத்தக நகல் ம.சா.ஆ.8 ஆகவும், காரின் காப்பீட்டு பாலிசி நகல் ம.சா.ஆ.9 ஆகவும், காரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.10 ஆகவும், காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.11 ஆகவும், ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.12 ஆகவும்,**

எக்ஸ்ரேக்கள் ம.சா.ஆ.13 ஆகவும், குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

தேசியநெடுஞ்சாலை தான் விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தின்போது நான் காரில் உட்கார்ந்து பயணம் செய்தேன். அது 3ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது. அதை 3ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்தார். அந்த கார் முன்னால் சென்று கொண்டிருந்த லாரியின் பின்புறத்தில் மோதியது. 3ம் எதிர்மனுதாரர் மீது தான் குற்றவழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது. இறுதிஅறிக்கையும் அவர்மீது தான் தாக்கல் செய்யபட்டுள்ளது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. என்னுடைய தொழில் வருமானத்தை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மருத்துவ செலவிற்கு ரூ.1 லட்சம் செலவானதற்கு பில்கள் தாக்கல் செய்யவில்லை. பல்வேறு தலைப்புகளில் நான் கேட்டுள்ள தொகை மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதார்களுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தின்போது நான் பயணம் செய்த காருக்கு முன்னால் லாரி சென்றுகொண்டிருந்தது. லாரி தீடிரென பிரேக் போட்டதால் தான் 3ம் எதிர்மனுதாரர் ஓட்டிசென்ற கார் லாரியின் பின்புறத்தில் மோதியது. லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது. காரில் சென்ற நபர்கள் அனைவருக்கும் அடிப்பட்டதால் உடனடியாக போலிசில் புகார் கொடுக்கமுடியவில்லை. லாரியின் உரிமையாளரும் காப்பீட்டு நிறுவனம்

நஷ்டயீடு கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்லல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 26/11/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.11.26 15:07:56 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.